[திரு. செ. செம்மலை] [2003 ஏப்ரல் 28

இருக்கிற தண்டையார்பேட்டை புறநகர் மருத்துவமனைக்கு மட்டும் நம்முடைய உறுப்பினர் அவர்கள் அரசுக்கு வேண்டுகோள் விடுத்ததன் பேரில் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 60 இலட்சம் ரூபாயை ஒதுக்கி, அந்த மருத்துவமனையை மேம்படுத்துவதற்கும், விரிவுபடுத்துவதற்கும் உத்தரவிட்டு, ரூ. 40 இலட்சம் கட்டட செலவிற்காகவும், ரூ. 20 இலட்சம் அங்கே நவீன கருவிகள் வாங்குவதற்கும் உத்தரவளித்து, அந்தப் பணி இப்போது நடைபெற்று வருகிறது. சில குறிப்பிட்ட சிகிச்சைப் பிரிவுகள் தேவைப்படின், அதுவும் அந்த மருத்துவமனைக்கு நிச்சயமாக வழங்கப்படும். காரணம், வட சென்னைப் பகுதி மக்கள்தொகை அதிகமாகவுள்ள பகுதி. அந்தப் பகுதிக்கு மருத்துவ சேவை அதிகம் தேவை என்பதை புரட்சித் தலைவி அரசு உணர்ந்திருக்கிறது. எனவே தேவையான வசதிகள் அந்த மருத்துவமனைக்கு நிச்சயமாக செய்து கொடுக்கப்படும்.

4. அறிக்கை அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. பி.எம். நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001—2003 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தி ஏழு முதல முப்பது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் [தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுநிலை (அந்தஸ்து) வழங்குதல்] திருத்தச் சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் [தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுநிலை (அந்தஸ்து) வழங்குதல்] திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

2003 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் [தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுநிலை (அந்தஸ்து) வழங்குதல்] திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11-40

6. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 24 — உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம்

(ஆ) கோரிக்கை எண் 46—போக்குவரத்துத் துறை

(அ) கோரிக்கை எண் 24—உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2003-2004ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக்